செ.வெ.எண் :- 582 நாள் :- 05-10-2012.

**செய்தி வெளியீடு**

சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள தன்னார்வ அமைப்புகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. இந்திய அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள மொழி எதிலும் பின்வரும் பணி எதனையும் புரிந்து வருகிற அத்தகைய அமைப்புகளுக்கு மானியம் கிடைக்கத்தக்கதாகும், அவையாவன:-

(i) முதல்சார் சட்ட புத்தகங்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,
(ii) தரமான சட்ட புத்தகங்கள் அல்லது செம்மொழி இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் வெளியிடுதல்,
(iii) சட்டச் சொல்லகராதியினைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்,
(iv) சட்ட பத்திரிக்கைகளை வெளியிடுதல்,
(v) சட்டம் தொடர்புடைய துறைகளில் இந்தி அல்லது மாநிலங்களின் பிற ஆட்சி மொழிகளை மேம்படுத்தலாகும் மற்றும் பரப்பலாகும் பிற வெளியீடு எதுவும், மற்றும்
(vi) மண்டல மொழிகளுடன் சேர்ந்திருக்கும் அதனுடைய இந்தி வாசகத்தினாலான பணிகளுக்கு கூடுதல் மானியங்கள் ஓர்வு செய்யப்படுதல்.

3. விண்ணப்பபடிவம் & திட்டத்தின் நகல் மைய அரசின் உலகம் முழுவதிலுமுள்ள தகவலைத் தனது கணிப்பொறியில் காணத்தக்கதாகச் செய்யும் பன்னாட்டு கணிப்பொறி இணையம். சட்ட அமைச்சகம். தேசிய தகவல் மையத்தில்/ஆட்சிமொழிப்பிரிவில் (www.lawmin.nic.in/olwing) கிடைக்கும். கூடுதல் தகவல் மற்றும் விண்ணப்ப படிவம் பெறுவதற்கு இணைச் செயலாளர் மற்றும் சட்ட ஆலோசகர், சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், சட்டமியற்றுத்துறை, ஆட்சிமொழிப் பிரிவு, அறை எண்.742, 7வது தளம், 'அ' பகுதி சாஸ்திரிபவன், புதுதில்லி–110 001 (தொலைபேசி எண்.011- 23386229) என்ற முகவரியை தொடர்பு கொள்ளவும். உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2012, அக்டோபர் 25க்குள் மேற்சொன்ன அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

கோ. ஜெயச்சந்திரன்
அரசுச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9